31.08.2017

தினமலர்

## விவசாயிகளுக்காக, 'இ - அடங்கல்' திட்டம் செயல்படுத்த அரசு தீவிரம்

விவசாயிகள் பயன்பெறும் வகையில் , 'இ அடங்கல் -' திட்டத்தை, செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகளை , அரசு துவங்கி உள்ளது சாகுபடி செய்யும் . விவசாயிகள், வங்கிகளிடம் பயிர்க்கடன் பெறுவதற்கும் , பயிர் காப்பீடு செய்வதற்கும் , அரசிடம் மானிய உதவிகளை பெறுவதற்கும் , சிட்டா மற்றும் அடங்கல் உள்ளிட்ட விபரங்களை, தாக்கல் செய்ய வேண்டும் . இதில், சிட்டாவை, இணையதளத்தில் இருந்து விவசாயிகள் பதிவிறக்கம் செய்து கொள்கின்றனர் அடங்கல் பெற ., வி.ஓ.ஏ., எனப்படும், கிராம நிர்வாக அலுவலரை நாடுகின்றனர் . ஏற்கனவே, தொகுத்து வைத்துள்ள விவசாயிகளின் நிலம் , அதில் செய்யப்படும் பயிர் வகைகள் குறித்த விபரங்களை ஆய்வு செய்து , அடங்கலை, வி.ஓ.ஏ.,க்கள் வழங்குவது வழக்கம் . இதற்கு, கால தாமதமாவதால் , குறித்த நேரத்தில் , பயிர்க்கடன்கள் மற்றும் அரசின் உதவிகளை பெற முடியாத நிலை, விவசாயி களுக்கு ஏற்பட்டுள்ளதுஅதனால் ., 'ஆன் - லைன் மூலம் அடங்கல் வழங்கும், 'இ அடங்கல் -' திட்டம் செயல்படுத்தப்படும்' என, ஜூலையில், தமிழக அரசு , சட்டசபையில் அறிவித்தது இதை செயல்படுத்த ., அரசாணை தற்போது வெளியிடப்பட்டு உள்ளது இது .குறித்த அறிக்கை , அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும் அனுப்பப்பட்டு உள்ளது.

இது குறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது விவசாயிகள் தங்களின் : பயிர் விளைச்சல் விபரங்களை, 'இ அடங்கல் -' திட்டப்படி, இணையதளத்தில், தாமாகவே பதிவு செய்ய முடியும் அரசின் ., 'இ ச -ேவை' மையங்கள் வாயிலாகவும் பதிவு செய்யலாம் . ஏற்கனவே, அடங்கலில் பதிவு செய்யப்பட்ட விபரங்களை சரிபார்க்கலாம் திருத்தம் இருப்பின் ., வி.ஓ.ஏ.,க்களிடம் முறையிடலாம் பயிர்க்கடன் ., பயிர் காப்பீடு , இழப்பீடு, நிவாரணம் பெறுவதற்காக , எந்த நேரத்திலும் , எந்த இடத்தில் இருந்தும் , அடங்கல் நகலை , விவசாயிகள் விரைவாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்இந்தாண்டு முதலே ., இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என, வருவாய் துறை கமிஷனர் , அரசிடம் கேட்டுள்ளார் . அதன்படி, இத்திட்டத்தை

நடைமுறைப்படுத்த, அரசாணை வெளியிடப்பட்டுள்ளது . 'இ அடங்கல் -' பதிவு எளிமையாக்கப்பட்டு உள்ளதால் , வி.ஓ.ஏ.,க்களின் பணிச்சுமையும் குறையும் . விவசாயிகளின் அவதிக்கும், முற்றுப்புள்ளி வைக்கப்படும் . இவ்வாறு அவர் கூறினார் . அடங்கல் என்றால் என்ன ? : ஒரு கிராமத்தில் இருக்கும் மொத்த சர்வே எண்கள் அடங்கிய பதிவேடு தான் , 'அடங்கல்' என, அழைக்கப்படுகிறது இந்த அடங்கலில் ., குறிப்பிட்ட சர்வே எண்ணுக்கு , உரிய நிலம் யார் பெயரில் இருக்கிறது என்ற விபரம் இடம் பெற்று இருக்கும் இது மட்டுமின்றி ., பட்டா எண், நிலத்தின் பயன்பாடு, பயிர் வகைகள் சாகுபடி குறித்த விபரங்களும் இடம் பெற்றிருக்கும்.

- நமது நிருபர் –

**வெங்காய தட்டுப்பாடு நம்ம ஊருக்கு வராது!**



'தமிழகத்தில், வெங்காயம் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை ' என, வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்மஹாராஷ்டிரா ., பீஹார், உத்தர பிரதேசம் , மத்திய பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் , பெரிய வெங்காயம் சாகுபடி அதிகளவில் நடக்கிறது . ஆண்டுதோறும், 1.94 கோடி டன் வெங்காயம் உற்பத்தி செய்யப்படுகிறது தற்போது ., மஹாராஷ்டிரா, பீஹார் உள்ளிட்ட மாநிலங்களில் , மழையால் வெங்காய பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளனஇதனால் ., டில்லி, மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் , வெங்காயம் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது தட்டுப்பாட்டை சமாளிக்க ., பதுக்கலை கட்டுப்படுத்துமாறு, மாநில அரசுகளுக்கு , மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது .

இது குறித்து , சென்னை, கோயம்பேடு மார்க்கெட் வெங்காய மொத்த வியாபாரிகள் கூறியதாவது:

சில மாதங்களாக, மஹாராஷ்டிரா மாநில வெங்காயத்தையே, தமிழகம் நம்பி இருந்தது . இதனால் ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக, கிலோ, 17 ரூபாய்க்கு கிடைத்த பெரிய வெங்காயம், 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது தற்போது ., ஆந்திராவில் இருந்து , தமிழகத்திற்கு வெங்காயம் வர துவங்கி உள்ளது இதனால் ., தமிழகத்தில் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை வ .ரத்தை பொறுத்து , விலை குறையுமா என்பது தெரியும்.இவ்வாறு அவர்கள் கூறினர் . - நமது நிருபர் –

## தென்மேற்கு பருவமழை தீவிரம் : அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு



மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால், தமிழகத்தில் உள்ள முக்கிய அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

ஈரோடு மாவட்டத்தின் முக்கிய நீர் ஆதாரமாக , பவானிசாகர் அணை உள்ளது . வடகிழக்கு பருவமழை மட்டுமின்றி, தென்மேற்கு பருவமழை மூலமும் , பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து கிடைக்கிறது அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான வட . கேரளா மற்றும் மே◌ற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய நீலகிரி மாவட்ட பகுதிகளில் , ஜூன், ஜூலை மாதங்களில் கனமழை பெய்தது இதனால் ., அணை நீர்மட்டம் , 50 அடியை எட்டியது அதன்பின் மழை குறைந்ததால் ., நீர்வரத்தும் சரிந்தது .

வெள்ளப்பெருக்கு தற்போது :, நீர்ப்பிடிப்பு பகுதியான , நீலகிரி மாவட்ட மலை பகுதிகளில், தென்மேற்கு பருவ மழை தீவிரம் அடைந்துஉள்ளது இதனால் ., பவானிசாகர் அணைக்கு , நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது வனப்பகுதி .

வழியாக வரும் மாயாறு மற்றும் பவானி ஆற்றில், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது . இதனால், மூன்று நாட்களுக்கு முன் , 56 அடியாக இருந்த பவானிசாகர் அணையின் நீர்மட்டம் நேற்று , 59 அடியை எட்டியது அணையில் ., 6.9 டி.சி.எம்., நீர் இருப்பு உள்ளது நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் ., படிப்படியாக, நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளது பாசனத்துக்கு நீர் திறக்க வாய்ப்புள்ளதாக ., பொதுப்பணி துறை அதிகாரிகள் தெரிவித்தனர்கடந்த இரு வாரங்களாக., பெரியாறு அணை நீர்ப்பிடிப்பில் மழை பெய்து வருகிறது .ஆக ., 21ல் அணையின் நீர்மட்டம் , 114 அடியாக இருந்தது. அதன்பின் பெய்த மழையால் , 10 நாட்களில், 4 அடி வரை உயர்ந்து , நேற்று மாலை நிலவரப்படி, 118 அடியை எட்டியது அணையின .் மொத்த உயரம் 152 அடி . தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்பு உள்ளதுவைகை அணையின் கொள்ளளவு ., 71 அடிஇதில் ., 30.41 அடியாக நீர்மட்டம் உள்ளது அணைக்கு நீர்வரத்து ., 182 கன அடியாகவும் , நீர் திறப்பு , 40 கன அடியாகவும் இருந்தது . குளிக்க அனுமதி திருநெல்வேலி மாவட்டத்தில் :, சில தினங்களாக, மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் மழை பெய்து வருகிறது பாபநாசம் . அணைக்கு, வினாடிக்கு, 2,277 கன அடி வீதமும் , சேர்வலாறு அணைக்கு வினாடிக்கு , 700 கன அடி வீதமும் தண்ணீர் வரத்து இருந்தது பாபநாசம் அணையின் நீ .ர்மட்டம் 2.20 அடி உயர்ந்து, 62.20 அடியை எட்டியதுசேர்வலாறு அணையின் நீர்மட்டம் ., ஒரே நாளில், 9.58 அடி உயர்ந்து , 73.49 அடியானதுநெல்லை ., தூத்துக்குடி மாவட்டங்களின் தேவைக்காக, தாமிரபரணியில் சற்று கூடுதலாக, 630 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது குற்றால .அருவிகளில் நேற்றும் தண்ணீர் கொட்டியது .

வெள்ளப்பெருக்கு குறைந்து விட்டதால், அருவிகளில் பொதுமக்கள் குளிக்க அனுமதிக்கப்பட்டனர்.

- நமது நிருபர் குழு –

## விலை குறையாத வெங்காயம் : கிலோ ரூ.100க்கு விற்பனை

ராமநாதபுரம் ராமநாதபுரத்தில் சின்ன வெங்காயம் விலை :, நான்கு மாதங்களாக 100 ரூபாய்க்கு குறையாமல் விற்கப்படுவதால் மக்கள் தவிக்கின்றனர் .
வறட்சியால், தமிழகத்தில் வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகளின் விளைச்சல் குறைந்து உள்ளதுதேனி .இதனால் அவற்றின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது ., கம்பம்,

திண்டுக்கல், திருச்சி உள்ளிட்ட பல இடங்களில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறதுஇதனால் . வறட்சியால் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டது ., ஏற்பட்ட தட்டுப்பாட்டால் விலை ஏறியது . கடந்த ஏப்., மாதம் கிலோ 60 முதல் 75 ரூபாய்க்கு விற்றது மே மாதம் 150 ரூபாய் என உச்சத்தை தொட்டது விலை உயர்வு ஜூன் . முழுவதும் 110 முதல் 130 வரை நீடித்தது தற்போது ., கிலோ 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

### பாமாயில் விலை உயர்வு

சேலம் பண்டிகை சீசன் துவங்கி உள்ள நிலையில் :, மத்திய அரசு , எண்ணெய்க்கான இறக்குமதி வரியை அதிகரித்து உள்ளதால் , 10 நாட்களில், பாமாயில் லிட்டருக்கு , ஆறு ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது . மலேஷியாவில், பாமாயில், சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி அதிகரித்துள்ளது இந்தியாவில் . பண்டிகை சீசனை முன்னிட்டு , அங்கிருந்து விற்பனைக்கு வரும் எண்ணெய் வரத்து அதிகரிக்க துவங்கி உள்ளது . இதனால், இந்தியாவில், பாமாயில், சூரியகாந்தி பயிரிடும் விவசாயிகள் பாதிக்கப்படுவதை தவிர்க்க , மத்திய அரசு , எண்ணெய்க்கான இறக்குமதி வரியை உயர்த்தியது.

இதன் எதிரொலியாக , ஆக., 19ல், பாமாயில், சூரியகாந்தி எண்ணெய் விலை , லிட்டருக்கு, நான்கு ரூபாய் உயர்ந்தது மீண்டும் ., ஆக., 29ல், லிட்டருக்கு, இரண்டு ரூபாய் என, 10 நாட்களில் எண்ணெய் விலை, ஆறு ரூபாய் வரை உயர்ந்துள்ளது.


தினமணி

## மேட்டூர் அணை நீர்மட்டம் 57.76 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை காலை 57.76 அடியாக உயர்ந்தது. அணைக்கு நொடிக்கு 6,751 கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக நொடிக்கு 1,300 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. அணையின் நீர் இருப்பு 23.04 டி.எம்.சி.யாக இருந்தது. காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மழை தணிந்திருந்தாலும் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 6 ஆயிரம் கனஅடிக்குக் குறையாமல் வந்துகொண்டிருப்பதால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

## நீர்வரத்து அதிகரிப்பால் பெரியாறு அணை நீர்மட்டம்117ஐ எட்டியது



கம்பம் முல்லைப்பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் கடந்த சில தினங்களாக : மழை பெய்து வருவதால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது நேற்று . முன்தினம் வினாடிக்கு 642 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று வினாடிக்கு 1267 கனஅடியாக அதிகரித்துள்ளது இதனால் அணையின் நீர்மட்டமும் .117 அடியை எட்டி உள்ளது நேற்றைய நிலவரப்படி ., 152 அடி உயரமுள்ள பெரியாறு அணையின் நீர்மட்டம் 116.80 அடியாக இருந்தது அணைக்கு நீர்வரத்து வினாட .ிக்கு 1267 கனஅடியாகவும், அணையிலிருந்து நீர் வெளியேற்றம் வினாடிக்கு 225 கனஅடியாகவும் இருந்தது அணையின் இருப்புநீர் .2051 மில்லியன் கனஅடியாக உள்ளது.

71 அடி உயரமுள்ள வைகையின் நீர்மட்டம் 30.15 அடியாக உள்ளது அணைக்கு . நீர்வரத்து வினாடிக்கு113 கனஅடியாகவும், அணையிலிருந்து வினாடிக்கு 40 கனஅடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது அணையின் இருப்புநீர் .374 மில்லியன் கனஅடியாக உள்ளது .57 அடி உயரமுள்ள மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 33.30

அடியாக உள்ளது . நீர் வெளியேற்றமும் இல்லை . அணைக்கு நீர்வரத்தும்ங இல்லை . அணையின் இருப்புநீர்107.88 மில்லியன் கனஅடியாக உள்ளது. 126 அடி உயரமுள்ள சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் நேற்று 74.45 அடியாக உள்ளது அணைக்கு .

நீர்வரத்து வினாடிக்கு1 கனஅடியாகவும், அணையிலிருந்து நீர்வெளியேற்றம் வினாடிக்கு 3 கனஅடியாகவும் இருந்தது அணையின் இருப்பு நீர் .34.19 மில்லியன் கனஅடியாக உள்ளது பெரியாறு .27.8 மிமீ., தேக்கடி 26.6 மிமீ., கூடலூர் 1.5 மிமீ., பாளையம் 2 மிமீ., வீரபாண்டி 8 மி.மீ மழை பதிவாகி இருந்தது.

## வறட்சியால் உற்பத்தி கடுமையாக பாதிப்பு : தேங்காய் கிலோ ரூ.40க்கு விற்பனை




நாகர்கோவில் குமரி மாவட்டத்தில் சுமார் :23 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது ஆனால் போதிய விலை கிடைக்காமல் . கடந்த சில மாதத்திற்கு முன்பு ஒரு கிலோ . தென்னை விவசாயிகள் தவித்து வந்தனர் . தேங்காய் ரூ13 முதல் ரூ .18 வரை கொள்முதல் செய்யப்பட்டது மேலும் உரிக்காத . . தேங்காய் ஒன்று ரூ5 முதல் ரூ .8 வரை வாங்கப்பட்டது இதனால் தேங்காய் . வெட்டுபவர்களுக்கு கூலிக்கே தேங்காய் விற்காமல் விவசாயிகள் அவதிப்பட்டு . இந்நிலையில் கடும் வறட்சி காரணமாக பல தென்னைகள் கருகியுள்ளன .வந்தனர் .விளைச்சலும் குறைந்துள்ளது

இதனால் தேங்காய் விலை உயர்ந்துள்ளது ஒரு கிலோ .தேங்காய் ரூ.34.50 முதல் ரூ.35 வரை விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர் அது போல் . . உரிக்காத தேங்காய் ஒன்று ரூ14 முதல் ரூ .19 வரை கொள்முதல் செய்கின்றனர் .

. வர்த்தக நிறுவனங்களில் ஒரு கிலோ தேங்காய் ரூ38 முதல் ரூ .40 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது தேங்காய்க்கு உரிய விலை கிடைத்தும் தென்னையில் . .தேங்காய் இல்லாமல் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்

## பருவ மழையால் ஆழியார் , பரம்பிக்குளம் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு : விவசாயிகள் மகிழ்ச்சி



பொள்ளாச்சி பொள்ளாச்சியை அடுத்த மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் :, தென்மேற்கு பருவமழையால் , ஆழியார் மற்றும் பரம்பிக்குளம் அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது . இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் .

பொள்ளாச்சியை அடுத்த மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில், இந்த ஆண்டு துவக்கத்திலிருந்து பல மாதமாக மழைப்பொழிவு இல்லாததால் , ஆழியார் மற்றும் பரம்பிக்குளம் அணைகளுக்கு தண்ணீர் வரத்து மிகவும் குறைவாக இருந்தது பின் ., கடந்த ஜூன் , ஜூலை மாதத்தில் தென்மேற்கு பருவமழை பொய்த்ததாலும் , அந்நேரத்தில் அணைகளுக்கு குறைந்த அளவிலே தண்ணீர் வரத்து இருந்தது . இந்நிலையில், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக கனமழையால், தண்ணீர் வரத்து அதிகரிக்க துவங்கியது.

இதில் நேற்று முன்தினம் பெய்த கனமழையால் , சில நாட்களுக்கு முன்பு 66 அடியாக இருந்த, ஆழியார் அணையின் நீர்மட்டம் நேற்று மதியம் 71.50அடியாக உயர்ந்தது . வினாடிக்கு600 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது அதுபோல் ., டாப்சிலிப்பை அடுத்த மொத்தம் 72 அடிகொண்ட பரம்பிக்குளம் அணைக்கு , மேற்கு தொடர்ச்சி

மலைப்பகுதியில் கனமழையால் , நேற்று காலை நிலவரப்படி வினாடிக்கு 1921கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது அணையின் நீர் மட்டம் .24.91அடியாக உள்ளது . பல மாதங்களுக்கு பிறகு , ஆழியார் மற்றும் பரம்பிக்குளம் அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் நேற்று காலை . பரம்பிக்குளம் : நிலவரப்படி மழையளவு வருமாறு27மிமீ, ஆழியார் 6.2மிமீ, மேல்நீரார் 59மிமீ, கீழ்நீரார் 62மிமீ, வேட்டைக்காரன்புதூர் 6 மிமீ, சர்க்கார்பதி 12மிமீ, மணக்கடவு 5.6 மிமீ, தூணக்கடவு 14 மிமீ, பெருவாரிப்பள்ளம் 15மிமீ, பொள்ளாச்சி 6.8 மிமீ, என்ற அளவில் மழைப்பதிவாகியுள்ளது.

## தோகைமலை பகுதியில் மானாவாரி சாகுபடியில் களை எடுக்கும் பணி தீவிரம்



தோகைமலை தோகைமலை பகுதியில் ஆடி பட்டத்தில் : மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்த விவசாயிகள் தற்போது முதல் கட்ட களை எடுக்கும் பணியை தொடங்கி உள்ளனர் கரூர் மாவட்டம் தோகைமலை பகுதிகளில் மழை இல்லாமல் . சாகுபடிகளை செய்வதில் ஆர்வம் இல்லாமல் இருந்த விவசாயிகள் கடந்த மாதம் பெய்த மழையினை பயன் படுத்தி மானாவாரி மற்றும் கிணற்று பாசன விவசாயிகள் தங்களது நிலங்களில் முதல் கால உழவினை செய்து நிலங்களை உலர வைத்தனர் .

அதனை தொடர்ந்து சொற்ப அளவில் மழை பெய்ததை அடுத்து ஆடிபட்டத்தில் பயிரிடக்கூடிய நிலக்கடலை , எள்ளு, துவரை, சோளம் உட்பட பல்வேறு தானிய வகைகளை மானாவாரி நிலங்களில் தெளித்து சாகுபடிகளை தொடங்கினர் இதில் . ஆடி மாதத்தில் விதைக்க கூடிய இந்த நிலக்கடலை, எள்ளு வரும் ஐப்பசி மாதக்

கடைசியில் அறுவடைக்கு வர உள்ளதுகருஞ்சோளம் ., துவரை போன்ற தானியங்கள் மார்கழி மாதத்தில் அறுவடைக்கு வர உள்ளது இதற்கான விதைகளை விவசாயிகள் . தனியார் கடைகளில்விலைக்கு பெற்று மானாவாரி நிலங்களில் விதைத்து உள்ளனர் . இதில் . விதைக்கபட்ட நிலங்களில் தற்போது பயிர்கள் வளர்ந்து கானப்படுகிறது களைப்பயிர்களை நீக்குவதற்காக விவசாயிகள் களை எடுக்கும் பணிகளை தொடங்கி இதில் .உள்ளனர் மும்முரமாக பெண் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## பவானிசாகர் அணையின் நீர்வரத்து அதிகரிப்பு

நீலகிரி நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக பவானிசாகர் : பவானிசாகர் அணையின் நீர்வரத்து . அணையின் நீர்வரத்து அதிகரித்துள்ளது4,992 கனஅடியில் இருந்து 5,990 கனஅடியாக அதிகரித்துள்ளது அணையின் நீர்மட்டம் . 60.15 அடியாகவும், நீர் இருப்பு 7.3 டியாகவும்.சி.எம்., நீர் திறப்பு 195 கனஅடியாகவும் உள்ளது.

## மேட்டூருக்கு நீர்வரத்து சரிவு



மேட்டூர்: மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 6,762 கனஅடியாக இருந்த நீர்வரத்து , நேற்று விநாடிக்கு 6,751 கனஅடியாக சரிந்தது . அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 700 கனஅடி வீதமும் , கிழக்கு,மேற்கு கால்வாயில் விநாடிக்கு 600 கனஅடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது அணைக்கு வரும் நீரின் அளவை விட திறக்கப்படும் நீரின் அளவு .

குறைந்த அளவிலேயே உள்ளதால் நீர்மட்டம் உயர்ந்துவருகிறது. நேற்று முன்தினம் 57.12 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று 57.76 அடியாக உயர்ந்தது .22.58 டிஎம்சியாக இருந்த நீர்வரத்து 23.04 டிஎம்சியாக அதிகரித்துள்ளது.

## விவசாயிகள் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று பாலாற்றில் தடுப்பணை கட்டப்படும்: முதல்வர் எடப்பாடி அறிவிப்பு



சென்னை இந்த . வண்டலூரில் எம்ஜிஆர் நூற்றாண்டு விழா நேற்று நடைபெற்றது : விழாவில், பங்கேற்ற முதல்வர் எடப்பாடி பழனிசாமி பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்: அவர் வெளியிட்ட அறிவிப்பு . காஞ்சிபுரம் நகரத்தில் உள்ள செங்கழுநீரோடை தெரு "டாக்டர் புரட்சித் தலைவர் எம் .ஜிசாலை .ஆர்." எனவும், கிழக்கு ராஜ வீதி "டாக்டர் புரட்சித் தலைவி ஜெயலலிதா அம்மா சாலை " எனவும் பெயரிடப்பட்டு அழைக்கப்படும் காஞ்சிபுரம் நகரத்தில் உள்ள மாவட்ட விளையாட்டு. அரங்கம், "பேரறிஞர் அண்ணா மாவட்ட விளையாட்டு அரங்கம் " என பெயர் மாற்றம் செய்யப்படும்உத்திரமேர.ூர் வட்டத்தில் உள்ள திருப்புலிவனம் கிராமத்தில் இயங்கி வரும் உத்திரமேரூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி "புரட்சித்தலைவர் டாக்டர் எம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி .ஆர்.ஜி." என பெயர் சூட்டப்படும் .

காஞ்சிபுரம் அருகில் கீழ்கதிர்பூர் கிராமத்தில் காஞ்சிபுரத்திற்கென புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்படும் .7 இடங்களில் தடுப்பணைகள் : காஞ்சிபுரம் மாவட்டத்தில் மழைக்காலங்களில் வெள்ள நீர் பாலாறு வழியாக வீணாக கடலில் கலப்பதை தடுக்க பாலாற்றின் குறுக்கே , மதுராந்தகம் வட்டம் , வள்ளிபுரம்,

வாலாஜாபாத் வட்டம் , வெங்குடிமற்றும் உள்ளாவூர் , திருக்கழுக்குன்றம் வட்டம் , வாயலூர் செங்கல்பட்டு வட்டம் , பழவேரி மற்றும் பாலூர் காஞ்சிபுரம் வட்டம் , வெங்கடாபுரம் ஆகிய ஏழு இடங்களில் தடுப்பணைகள் கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தடுப்பணைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் காஞ்சிபுரம் . மற்றும் பெரும்புதூர் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.